The Hon. Thiru P. U. SHANMUGAM : A statement @ is placed on the table of the House.

Betel Leaf Production

* 340 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any incentives are given to betel leaf production in this State : and

(*b*) if so, the details thereof ?

வெற்றிலை உற்பத்தி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் வெற்றிலை உற்பத்திக்காக ஊக்க உதவிகள் ஏவையேனும் அளிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தமிழ் நாட்டில் வெற்றிலை உற்பத்திக்கு விசேட சலுகை அளிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Audit Reports of the Co-operative Central Banks

‡* 330 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the names of the Co-operative Central Banks in the State which have not placed their Audit Report at the Annual General Body Meeting for the last three years ?

கூட்டுறவு மத்திய வங்கிகளின் தணிக்கை அறிக்கைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

@ 271–272 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

‡ 2—4—1973 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

1973 ஏப்ரல் 3]

இம் மாநிலத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தங்கள் தணிக்கை அறிக்கைகளை ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வைக்காத கூட்டுறவு மத்திய வங்கிகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தமிழகத்தில் உள்ள 16 மத்திய கூட்டுறவு வங்கிகளும் 1968-69, 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளை தங்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் வைத்துள்ளன.

அந்தப் பதினாறு வங்கிகளின் 1971-72-ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை கிடைத்த தகவல்களின்படி, 4 வங்கிகள் இதுவரை பொதுக் குழுக் கூட்டங்களைக் கூட்டி, அந்தக் கூட்டங்களில் 1971-72-க்கான தணிக்கை அறிக்கைகளையும் வைத்துள்ளன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

Message from the Governor

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973.

(2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly and signed by him, for the concurrence of the Council.

I have further received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Genral Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12